# கனவு வாரியம் - திரையிடலும் எங்கள் அனுபவமும்

**கதைச்சுருக்கம்**:

இப்படத்தில் எழில் என்னும் சிறுவனுக்கு தன் ஊரில் முதன் முதலாக மின்சாரம் வந்த போது, அவனுக்குள் ஏன், எப்படி, எதற்கு என்ற கேள்விகள் உதிக்கிறது. இந்தத் தாக்கமே அவனை வருங்காலத்தில் மின்சாரம் தயாரிக்கும் ஒரு காற்றாடியை உருவாக்கும் நிபுணனாக மாற்றுகிறது. மேலும் இப்படத்தின் ஒரு பகுதியாக இயற்கை முறையில் விவசாயம் செய்வதன் பயனையும், அவசியத்தையும் கூறுகிறார்கள்.

**படத்தைப் பற்றி ஆசிரியர்களின் கருத்து**:

இப்படம் பார்க்கும் பொழுது, பள்ளிக்கூடங்கள் மாணவர்களின் கனவு, கற்பனைகளின் இருப்பிடமாகவும் ஆசிரியர் அவற்றின் திறவுகோலாகவும் விளங்க வேண்டும் என்பதை உணர்ந்துகொண்டேன். மேலும் ஓர் ஆசிரியர் என்பவர் மாணவர்களிடையே எழும் சந்தேகத்திற்குப் பதிலளித்து ஓர் அரைப்புள்ளியாக இருக்க வேண்டுமே தவிர முற்றுப்புள்ளியாக இருந்துவிடக் கூடாது என்பதை உணர்ந்தேன். பண்டையத் தமிழகத்தில் குழந்தைகள் விளையாடிய விளையாட்டுகளை இப்படம் நினைவுக் கூறச் செய்கிறது. இப்படத்தின் வாயிலாக “கல்வி என்பது அனுபவக் கல்வியாகவும், செயல்வழிக் கற்றல் கல்வியாகவும் நடைபெற வேண்டுமே தவிர, ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது என்ற பழமொழிக்கேற்பக் கல்வி அமையக் கூடாது என்பதை உணர்த்துகிறது. ஆசிரியர் என்பவர் குழந்தைகளின் ஏன், எப்படி, எதற்குப் போன்ற கேள்விகளை எழுப்பும் ஆர்வத்திற்கு மதிப்பளிக்க வேண்டும். ஒரு மனிதனின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் அவனது பெற்றோர், ஆசிரியர், சமுதாயம் போன்றோரின் ஒத்துழைப்பு அவசியம். விவசாய நிலங்கள் அழிந்து வரும் இக்காலத்தில் இயற்கை முறையில் விவசாயம் செய்வதன் மூலம் ஏற்படும் நன்மைகள் உணரமுடிகிறது. இப்படத்தின் மூலம் நீர், மின்சாரம் மட்டுமல்லாமல் மற்ற வளங்களிலும் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தைத் சிந்திக்க வைக்கிறது. திறமையில்லாக் குழந்தைகள் என்று எவருமில்லை. அத்திறமைகளைக் கண்டு வெளிக்கொணர வேண்டியது பெற்றோர்,ஆசிரியர் மற்றும் சமுதாயத்தின் கடமையாகும்.



படத்தில் வரும் சில வசனங்கள் படம் பார்த்தப் பின்பும் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தன:

“ஒரு காரியத்தில் இறங்கியபின் பின்வாங்காமல் எதைப்பற்றியும் நின்னக்காமல் தோடர்ந்து முன்னோக்கிச் செல்லுதல் வேண்டும்”

“ஒருவன் ஓர் அடி முன்னோக்கிச் செல்லும்போது அவனுக்கு உதவி செய்யாமல் இருந்தால் கூட பரவாயில்லை அவனைத் தடுக்காமல் இருந்தால் போதும் “.

ஒவ்வொரு சாதனையாளரும் அவரவர்

துறைகளில் மேற்கொள்ளும் முயற்சிகளில் வெற்றி அடையப் பல இன்னல்கள் மற்றும் அவமானங்களைச் சந்திக்க நேரிடுகிறது என்பதை வலியுறுத்திய படம் "கனவு வாரியம்".

**பள்ளியில் திரையிட்ட அனுபவம்** :

இப்படம் எங்கள் பள்ளியில் திரையிடப்பட்டது. மாணவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் படம் பார்த்தனர். அதில் வரும் "கல்லா மண்ணா" என்கிற பாடலில் நம் கிராமங்களில் விளையாடி மறந்த விளையாட்டுகளின் பெயர்களைக் கொண்டு ஒரு பாடலை இயற்றி நமக்கு நினைவு கூறச் செய்த படம் "கனவு வாரியம்". இது போன்ற விளையாட்டுகளை நாம் நம் பள்ளியில் கடைப் பிடித்தோமானால் நம் பாரம்பரிய விளையாட்டுகளின் மூலம் மாணவர்கள் பெரிதும் பயன்படுத்துவர்.

இப்படத்தில் வரும் காட்சிகளில் நாம் நம் அன்றாட வாழ்வில் காணும் சிறு சிறு நிகழ்வுகளில் கூட அறிவியல் உண்மைகள் மறைந்திருக்கிறது என்பதனை உணர்த்தும் படம்.

**உதாரணம்**:

"முகம் கழுவும் காட்சியில் தண்ணீர் தானாக மேலோட்டமாக வருவதற்கு குழாவை அமைத்த விதம்."

"சாணம் ஓர் இயற்கை உரம்"

"கைப்பேசி தண்ணீரில் நனைந்தப் பின் அதை அரிசியில் போட்டு உலர வைக்கும் காட்சி"

**மாணவர்களிடம் கலந்துரையாடல்**:

படம் பார்த்த பின்பு மாணவர்களின் புரிதலை அறிய, படம் எப்படி இருந்தது? பிடித்த காட்சி எது? நாயகன் (சிறு வயதில்) அறிவாளியா அல்லது முட்டாளா? அவன் பள்ளிப் படிப்பை விட்டு நின்றது சரியா? தவறா? - போன்ற கேள்விகள் மாணவர்களிடம் கேட்டு விவாதித்தோம். அதில் ஒரு மாணவன் சார், எனக்கு மொபைல் ஃபொன் தண்ணீரில் கழுவன காட்சி பிடித்தது. ஆனால் சார், ஃபொன் தண்ணீரில் கழுவினால் வீணாகிவிடாதா? என்றான். அவனுக்கு என்ன பதில் கூற வேண்டும் என்று சற்று சிந்தித்தேன். நான் ஆம், வீணாகிவிடாது என்றால் மாணவன் படத்தில் பார்த்ததை வீட்டில் ஒரு ஃபொனை வைத்து சோதனைச் செய்யக் கூடும் என்பதால் நான் நாளைக் கூறுகிறேன் என்றேன். இத்தனைக்கும் அந்த மாணவன் எழுதப் படிக்க சிரமப் படுவான். ஆனால், அவன் கேட்டக் கேள்விக்கு பதில் கூற என்னால் முடியவில்லை.

இவ்வேளையில், வாரம்தோறும் ஓர் இடத்தில் ஆசிரியர்கள் சந்தித்து கல்வி சம்பந்தமான புத்தகம் வாசிப்பது, படங்கள் பார்ப்பது எனச் சமீபகாலமாக ஈடுபட்டு வருகிறோம். ஒரு சந்திப்பின் போது, மாணவர்களுக்குப் படம் போட்ட அனுபவத்தைப் பகிர்ந்தேன் மற்றும் அந்த மாணவர் கேட்டக் கேள்வியைக் கூறினேன். அப்போது ஓர் ஆசிரியர், "ஏன் ஃபொன் வைத்து





சோதனைச் செய்ய வேண்டும், வேறோருப் பொருளைக் கொண்டு மாணவர்கள் முன் சோதனைச் செய்து காண்பிக்கலாம் என்றார். மேலும் அவனுடைய சந்தேகமும் தீர்க்கப்படும் என். அவர் கூறியப் பின்புதான் எனக்கும் யோசனை வந்தது. எந்தவொரு பிரச்சனைக்கும் தீர்வு உள்ளது. அதற்கு நாம் நினைவில் கொள்ள வேண்டிய மந்திரம் “மாத்தி யோசி”, படத்தில் கூட இது ஒரு முக்கிய வசனம்.

இன்றையக் கல்வி முறையில் குழந்தைகள் புத்தக மூட்டையைச் சுமப்பவர்களாகவும், பாடப்புத்தகத்தை மனப்பாடம் செய்து 100/100 மதிப்பெண் பெறும் நிலையில் தான் உள்ளனரே தவிர அவர்களின் படைப்பாற்றலை வளர்க்கும் சூழல் இல்லை என்பதை இப்படம் உணர வைக்கிறது.

**விவசாயம்**:

விவசாயத்திற்குத் தண்ணீர் இல்லை என்பது விவசாயிப் பிரச்சனை, அடுத்த தலைமுறைக்கு விவசாயத்திற்கு விவசாயியே இல்லை என்பது நாட்டிற்கேப் பிரச்சனை என்பதை அழகாகக் காட்டி விவசாயத்தைப் பற்றிய அவசியம் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது மேலும் மாற்று வழியில் எவ்வாறு விவசாயம் செய்ய வேண்டும் என்பதைக் கூறுகிறது இப்படம். நாமும் நம் பள்ளியில் மாணவர்களுக்கு விவசாயம் சார்ந்த சில செயல்களைச் செய்து மாணவர்களுக்கு விவசாயத்தின் மீது ஆர்வம் ஏற்படுத்துதல் வேண்டும்.

**முடிவுரை**:

நம் நாட்டில் நிலவும் முக்கியப் பிரச்சனைகளைப் பெருஞ்சவாலாக ஏற்று உள்ளூர் வளங்களைக் கொண்டு அவற்றை நிவர்த்திச் செய்யும் அளவிற்குக் கல்விமுறையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதே இப்படம் கூறும் உண்மை.


**சு. கவிதா**
தொ.ப.ஆ, அ.தொ.ப.
மணமேடு


**ச. கொகுலா,**
தொ.ப.ஆ, அ.தொ.ப.
மணமேடு